(b) வரைவிலக்கணம் - தாவரச் சுரப்புக்கள் **( 6 புள்ளிகள் )**

1. தண்டின் போதுமான அளவு வளர்ச்சி.
2. வெட்டுவதற்குப் பொருத்தமான உபகரணத் தெரிவு.
3. மரத்தில் பொருத்தமான இடத்தெரிவு.
4. பொருத்தமாக பட்டையை வெட்டி அகற்றல்.
5. சேகரிப்பிற்குப் பொருத்தமான பாத்திரத்தைப் பயன்படுத்துதல்.
6. தேவையற்ற நுண்ணங்கித் தொற்றைத் தவிர்த்தல்.
7. மழைத் தடுப்புக் கவசத்தைப் பயன்படுத்தல்.
8. சேகரித்த பாலை முறையாகக் களஞ்சியப் படுத்தல்.

**(8 விடயங்களைப் பெயரிடல் 8 x 1 = 8 புள்ளிகள் )**

**( 8 விடயங்களைப் விபரித்தல் 8 x 2 = 16 புள்ளிகள் )**

(c) வரைவிலக்கணம் - மண்ணின்றிய பயிர்ச்செய்கை **(06 புள்ளிகள் )**

ஊடகம்

1. திண்ம ஊடகம்
   i) கொதிநீராவி அடுப்பில் ஏறத்தாழ ஒரு மணி நேரம் அவித்தல்.
   ii) சூரிய வெப்பப் பரிகரிப்பு – ஏறத்தாழ 10 – 15 cm உயரமாக திண்ம ஊடகப் படையை ஊடு காட்டும் பொலித்தீன் தாளினால் மூடி இரண்டு வார காலம் சூரிய ஒளி படச் செய்தல்.
   iii) $NaHClO_3$ போன்ற இரசாயனப் பொருளை 4 – 8 mg / kg விகிதத்தல் கலந்து 8 – 10 மணித்தியாலங்களின் பின்னர் கழுவி அகற்றுதல்.

2. திரவ ஊடகம்
   i) $NaHClO_3$ போன்ற இரசாயனப் பொருளை 2 – 3 mg / kg விகிதத்தல் இட்டு கிருமியழித்தல், களஞ்சியத் தொட்டியில் ஏறத்தாழ 10 – 12 மணித்தியாலங்கள் தேக்கி வைத்திருத்தல். பின் நுண் வடிகட்டித் தொகுதியினூடாக நீரைச் செலுத்துதல்.

உள்ளீடுகள்

1. பதிய இனப்பெருக்க அலகுகள்
   i) மெதையில் புரோமைடைப் பயன்படுத்தி தூபமூட்டல்.
   ii) ஒளி படச் செய்தல்.
   iii) பூச்சி நாசினிக் கரைசலைத் தெளித்தல்.

2. வித்து
   i) பங்கசு நாசினிகளுடன் பரிகரித்தல் - கப்ரான்